**தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

**அனுப்புநர்**

திரு. க. இளம்பகவத், இ. ஆ. ப.,
சிறப்புப் பணி அலுவலர் (மு. கூ. பொ),
இல்லம் தேடிக் கல்வி,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
சென்னை - 600 006.

**பெறுநர்**

முதன்மைக் கல்வி அலுவலர்,
அனைத்து மாவட்டங்கள்.

**ந.க.எண்.449/A11/ITK/SS/2023 நாள்.25.09 2023**

**அய்யா/ அம்மையீர்,**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – இல்லம் தேடிக் கல்வி மையங்களுக்கான கற்றல் கற்பித்தல் பொருள்கள் மற்றும் தன்னார்வலர் கையேடு ஆகியவற்றை தன்னார்வலர்களுக்கு வழங்குவதற்கான வழிமுறைகள் – தொடர்பாக.

...........

இல்லம் தேடிக் கல்வி மூலம் தினமும் மாலை நேரங்களில் மாணவர்களிடம் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் தன்னார்வலர்கள் மூலம் நடைபெற்று வருகிறது. இல்லம் தேடிக் கல்வி மையம் புதிதாக தொடங்கப்பட்டபொழுது அம்மையத்திற்கு தேவையான கற்றல் கற்பித்தல் பொருட்கள் வழங்கப்பட்டது. தற்பொழுது அனைத்து இல்லம் தேடிக் கல்வி மையங்களுக்கும் அடிப்படை தேவையான கீழ்காணும் கற்றல் கற்பித்தல் பொருள்கள் மீண்டும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**கற்றல் கற்பித்தல் பொருள்கள்**

| S.No. | Particulars | Qty. |
|---|---|---|
| 1 | Rolling black board | 1 No. |
| 2 | Duster | 1 No. |
| 3 | Chart paper | 7 Nos. |
| 4 | Sketch pen (12 colours) | 1 packet |
| 5 | Chalk piece (5 colours) | 1 box |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் கற்பித்தல் பொருட்கள் TANSI மூலம் அந்தந்த வட்டார வளமையத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. வட்டாரவளமையம் வாரியாக வழங்கப்பட்டு வருகிற கற்றல் கற்பித்தல் பொருட்களின் (Set) எண்ணிக்கை விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இக்கற்றல் கற்பித்தல் பொருள்களை குறுவளமையத்திற்கு எடுத்துச் சென்று தன்னார்வலர்களுக்கு வழங்கப்படவேண்டும். கற்றல் கற்பித்தல் பொருட்களை வட்டார வளமையத்திலிருந்து குறுவளமையத்திற்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து செலவினம் ரூ.500/-க்கு மிகாமல் செலவினம் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கான செலவினம் வட்டார வளமையத்தில் கையிருப்பிலுள்ள இல்லம் தேடிக் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவேண்டும். வட்டாரவளமையத்திற்குட்பட்ட அனைத்து தன்னார்வலர்களுக்கும் வழங்கப்பட்ட பின் மீதம் உள்ள கற்றல் கற்பித்தல் பொருட்கள் (Set) அந்தந்த வட்டார வளமையத்தில் அதற்குரிய வழிக்காட்டுதல் வரும் வரை பத்திரமாக வைத்திருத்தல் வேண்டும்.

மேலும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகம் மூலம் நிலைவாரியாக கீழ்க்கண்டவாறு தன்னார்வலர் கையேடு அச்சடிக்கப்பட்டு மாவட்டங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

| நிலை | எண்ணிக்கை |
|---|---|
| தொடக்க நிலை | 3 books (Tamil, English & Maths) |
| உயர்தொடக்க நிலை | 1book |

மாவட்டவாரியாக கையேடு வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தினமும் ITK செயலியில் தன்னார்வலர்கள் மாணவர்களின் வருகைப்பதிவு மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே ITK செயலியில் வருகைப்பதிவு மேற்கொண்டவர்களில் ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்களால் Good மற்றும் High வருகைப்பதிவு என குறிப்பிடப்பட்ட மையங்களிலுள்ள தன்னார்வலர்களுக்கு முதலில் கையேடு வழங்கப்பட வேண்டும். இத்தன்னார்வலர்களின் விவரம் மாவட்டங்களுக்கு அனுப்பப்படும். ITK Volunteers service willingness- ல் பணியில்

தொடர விருப்பம் இல்லை என பதிவு செய்த தன்னார்வலர்களுக்கு கையேடு வழங்கப்பட வேண்டிய அவசியமில்லை.

மாவட்டத்திலிருந்து வட்டாரவளமையத்திற்கு தன்னார்வலர் கையேட்டினை அனுப்புவதற்காகும் போக்குவரத்து செலவினத்தை மாவட்ட இல்லம் தேடிக் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

மேலும் குறுவளமையத்திலிருந்து தன்னார்வலர்களுக்கு வழங்கப்படும் கற்றல் கற்பித்தல் பொருட்கள் மற்றும் தன்னார்வலர் கையேடு ஆகியவற்றை வழங்கும் போது இருப்பு பதிவேடு பராமரிக்க வேண்டும். அப்பதிவேட்டில் தன்னார்வலர் எண், தன்னார்வலர் பெயர் மற்றும் கையொப்பம் ஆகியவை இடம்பெற வேண்டும்.

எனவே தன்னார்வலர்களுக்கு கையேடு மற்றும் கற்றல் கற்பித்தல் பொருட்களை எவ்வித இடர்பாடுகளின்றி வழங்கப்படுவதை உறுதி செய்ய அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

25/9/23

சிறப்புப் பணி அலுவலர் (மு. கூ. பொ)